Wages for suspension period.

* 601. Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Labour Advisory Committee has recommended during 1973, the amendment of the model standing order of each company or concern so that the worker may get wages during his suspension period; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, (அ) ஆம். தொழிலாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படும் கால அளவில் அவர்களுக்கு நிர்வாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதைக் கட்டாயமாக்கும் வகையில், பொருத்தமான சட்டம் கொண்டுவரப்படலாமென்று மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியம் பரிவுரை செய்துள்ளது.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இதுபற்றி எப்போது சர்க்கார் முடிவு செய்யும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இது இப்போது மாநில தொழிலாளர் நல வாரியத்தால் பரிசீலனை செய்யப்படுகிறது. சட்ட இலாகாவுக்கு அனுப்பி சில தகவல்கள் கேட்டிருக்கிறார்கள். தகவல் வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த சர்க்கார் ஊழியர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டால் அந்தக் காலத்திற்கு அரைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனல் தனியார் நிறுவனங்களில் கொடுக்கப்படுவதில்லை. தனியார் நிறுவனங்களிலும் கொடுக்கவேண்டுமென்று ஒரு திருத்த பில்லை ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 6 மாதங்களுக்கு முன்பே கொடுத்தார்கள். இன்னும் அது பற்றி முடிவு செய்யப்படவில்லையானல், இன்னும் எவ்வளவு காலமாகும்? இந்தக் கூட்டத் தொடரிலாவது கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்மிபுகு திரு. க. இராசாராம்: சட்டத் துறையினரிடம் சில விபரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. பதில் வந்தவுடன் விரைவிலேயே கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த பில் சட்டமாக வருவதற்கு காலதாமதம் ஆகுமானல், இடைக்காலத்திற்கு சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 25]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்களில் சில இப்போது அலவன்ஸ் தந்துகொண்டிருக்கிறார்கள். சிம்சன் கம்பெனியில் முழு அளவில் கொடுக்கிறார்கள். ஆகவே, இதற்கு இடைக்காலத்திற்கு என்று திடீரென்று ஒரு சட்டம் தேவையில்லை என்று கருதுகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், ஒவ்வொரு கம்பெனிக்கும் ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கிறது. அது அந்தந்த கம்பெனியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் வேலைக்கு எப்போது வரவேண்டும்; எப்போது போக வேண்டும் என்பதைப்பற்றி இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தி இந்த சஸ்பென்ட் பீரியடுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்குமா ? சஸ்பென்ட் செய்யப்பட்டது நியாயமாகவும் இருக்கலாம், அநியாயமாகவும் இருக்கலாம். அது பரிசீலனை செய்து முடிந்தபிறகுதான் தெரிய வரும். ஆகவே, இப்போது இருக்கின்ற ஸ்டான்டிங் ஆர்டரைத் திருத்தாமல், தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்து சஸ்பென்ட் பீரியடுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டம் இயற்றப் படும்போது கனம் அங்கத்தினருடைய ஆலோசனை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

Lands of Theosophical Society, Madras.

* 602 *Q.*—THIRU N. D5NNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a large portion of land belonging to the Theosophical Society at Adayar, in Madras City is being acquired by the Government ; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : அதற்கான ப்ரபோசல் ஏதாவது அரசிடம் இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : முதலில் அப்படிப்பட்ட ஓரெண்ணம் அரசிடம் இருந்தது. அரசுக்குத் தெரிவிக்காமல் விற்பதில்லை—என்கிற சில நிபந்தனைகளை ஒப்பந்தம் மூலமாக ஏற்படுத்திக்கொண்டு, தங்களிடமே அந்த